# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 63 /பேரூ/2026**
**நாள் : 01.07.2026**

T. ரமேஷ் கண்ணன்,
பவானி,
ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், பவானி, சக்தி நகர் அஞ்சல், A. புதுப்பாளையம், 65, ஓம் காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. T. ரமேஷ் கண்ணன் என்பவரது 10.02.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.02.2026 அன்று பெறப்பட்டு, 63/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், பவானி, சக்தி நகர் அஞ்சல், A. புதுப்பாளையம், 65, ஓம் காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. T. ரமேஷ் கண்ணன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 10.02.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

I, Ramesh Kannan T, on behalf of the residents of Appakudal Revenue Village, hereby submit this formal complaint under The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 against the Executive Officer (EO) of Appakudal Town Panchayat, Erode District for maladministration, willful negligence and failure to maintain a public well that has served the community for over six decades.

1. Jurisdiction

This Hon'ble Ombudsman has jurisdiction to entertain the present complaint under Sections 3, 8, and 10 of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, as the complaint relates to maladministration, willful negligence, abuse of power, neglect of duty and lack of integrity by a public servant of a Local Body.

2. <u>Background and Facts of the Case</u>

A public well situated at Appakudal Revenue Village, Ward No.4, Survey Numbers 87/13 & 87/12, has been serving as a vital source of water for the residents of the locality for the past 60 years. The said fact has been officially confirmed by the Appakudal Town Panchayat through information obtained under the Right to Information Act, 2005. which also confirms that the well was maintained by the Town Panchayat for more than 50 years.

However, at present, the well is in a highly contaminated and neglected condition, with solid waste and other pollutants accumulated in it, rendering the water completely unfit for any form of use. The lack of cleaning and maintenance has resulted in serious environmental degradation and poses a grave public health hazard, including the risk of waterborne diseases.

3. <u>Representations and Inaction by the Local Body</u>

Several representations have been made by the local residents to the Appakudal Town Panchayat requesting immediate cleaning, restoration and maintenance of the said public well. Despite repeated requests, no effective action has been taken by the Panchayat authorities.

Further, a complaint was also filed before the Tamil Nadu Pollution Control Board (TNPCB). The TNPCB, after due consideration, forwarded the matter to the Appakudal Town Panchayat for necessary action. Regrettably, even after such referral, no steps have been taken by the concerned officials.

4. <u>Reply of the Executive Officer</u>

In response, the Executive Officer has stated that

- the public well has not been in use for several years and
- the well is located in private patta land' hence the Town Panchayat is unable to clean or maintain it.

5. <u>Objection to the Reply – Maladministration Established</u>

The above reply is factually incorrect, arbitrary, misleading and legally untenable for the following reasons:

a) The well has served the public continuously for nearly 60 years, which is a matter of public record.
b) Under the RTI reply issued by the Town Panchayat itself, it is admitted that the well was constructed and maintained by the Town Panchayat for more than five decades, establishing its character as a public asset.
c) The sudden claim of private patta ownership appears to be raised only to avoid statutory responsibility and to favour a private individual, at the cost of the larger public interest and thereby depriving the general public of a vital water resource.
d) Such conduct amounts to abuse of official position, favoritism and lack of integrity, falling squarely within the definition of maladministration and willful negligence under the Act.

The continued neglect of a long-standing public water source clearly violates the principles of public trust, environmental protection and public health obligations of the local body.

6. Grounds of Complaint

The actions and omissions of the Respondent Executive Officer amount to maladministration within the meaning of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, on the following grounds:

a) Failure to discharge statutory duties entrusted to the Town Panchayat with respect to maintenance of public water sources
b) Wilful negligence and inaction resulting in public injury, despite repeated representations from the public
c) Failure to protect a public well, public health, sanitation and environmental safety
d) Abuse of official position to favour a private individual at the cost of public interest
e) Causing undue hardship, health risk, and denial of a basic civic amenity to the residents of the locality

The Executive Officer has failed to uphold the public trust doctrine and has acted in violation of the norms of integrity, accountability, and conduct expected of a public servant entrusted with safeguarding public health and environmental resources.

The Respondent's refusal to maintain the public well, contrary to official records and long standing public use, coupled with willful neglect and favoritism, clearly attracts the statutory definition of maladministration and warrants intervention by this Hon'ble Ombudsman.

7. Cause of Action

The cause of action is continuous and recurring, arising from the persistent failure of the Respondents to maintain a public water source and remedy public health hazards, despite repeated representations and directions from statutory authorities.

8. Relief Sought

In exercise of the powers conferred under the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, I humbly pray that this Hon'ble Ombudsman may be pleased to

1. Direct the immediate and thorough cleaning of the public well, including complete removal of contaminants and solid waste.
2. Order the restoration of the well to a hygienic and usable condition, in compliance with public health and environmental norms.
3. Direct the installation of a protective cover and preventive safeguards to avoid future contamination.
4. Order the repair and rectification of the surrounding platform and access area to ensure public safety.
5. Direct the Appakudal Town Panchayat to undertake regular inspection, maintenance and monitoring of the well on a continuing basis.
6. Initiate appropriate action against the Executive Officer for maladministration, willful negligence and abuse of official position, as deemed fit under Act.

7. Pass any other order deemed fit in the interest of justice and public welfare.

9. <u>Prayer</u>

In view of the above, this complaint is submitted in the larger interest of public health, environmental protection, and accountable local governance. The continued inaction of the Executive Officer has resulted in grave public injury, warranting urgent corrective and disciplinary measures.

I therefore respectfully request this Hon'ble Ombudsman to be pleased to inquire into the matter and grant appropriate relief.

10. List of Annexures

- Annexure A – RTI reply confirming Appakudal Panchayat maintenance of the well
- Annexure B – Copies of representatives submitted by residents
- Annexure C - List of supporting signatures from local residents
- Annexure D – Reply issued by the Executive Officer
- Annexure E – Complaint submitted to Tamil Nadu Pollution Controal Board
- Annexure F – Forwarding letter/order of TNPCB to Appakudal Town Panchayat".

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 79/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல் பேரூராட்சியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வறட்சி மற்றும் குடிநீர் பற்றாக்குறையின் காரணமாக பேரூராட்சி நிர்வாகத்தின் மூலமாக தனியார் மற்றும் அரசு நிலங்களில் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு கிணறுகள் வெட்டப்பட்டு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனிடையில் கடுமையான நீர் மாசு காரணமாக பெரும்பாலான கிணறுகள் மக்கள் உபயோகப்படுத்துவதற்கு தகுதி வாய்ந்து இல்லாமல் இருந்ததால் சுமார் 29 ஆண்டுகளுக்கு முன்னரே பொதுமக்களின் நலன் கருதியே மாசடைந்த கிணற்று நீரை வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டது .

இதற்கு மாற்று ஏற்பாடாக பேரூராட்சி பகுதியில் வாழும் பொதுமக்களின்அடிப்படை தேவையினை நிறைவேற்றும் பொருட்டு ஆப்பக்கூடல் பேரூராட்சியில் இயங்கி வரும் சக்தி சர்க்கரை ஆலையின் உதவியுடன் சுமார் ரூ.181.12 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு தனி குடிநீர் திட்டம் வகுக்கப்பட்டு 21 கி. மீட்டர் நீளத்திற்கு பைப் லைன் விஸ்தரிப்பு பணி மேற்கொண்டு இன்றுவரை நல்லமுறையில் பாதிப்புமின்றி அனைத்து பகுதி மக்களுக்கும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் மூலம் கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறை மற்றும் பவானி ஆற்றில் தண்ணீர் அதிக அளவு செல்லும் போது மின்மோட்டார் இயக்க இயலாதபோது குடிநீர் வழங்குவதில் தடை ஏற்படும் சமயத்தில்

தனிப்பட்ட முறையில் லாரிகள் மூலம் வீடுதோறும் தண்ணீர் சப்ளை இன்றுவரை வழங்கப்பட்டு வருகிறது.

இதுதவிர மனுதாரர் திரு. டி. ரமேஷ் கண்ணன் த/பெ தனக்கோடி என்பவரின் வீடு உட்பட பல வீடுகளுக்கு சக்தி சர்க்கரை ஆலை மூலம் ஒரு நாள் விட்டு ஒருநாள் லாரி மூலம் தண்ணீர் தேவைக்கேற்ப நாளது வரை வழங்கப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆப்பக்கூடல் கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் 20.01.2020ம் தேதி சான்றின்படியும், வருவாய்த் துறையின் இணையதளச் சான்று 08.04.2026 தேதி அன்று எடுக்கப்பட்ட FMB Sketch, பட்டா சான்றுகளின்படி பொது கிணறு உள்ள இடமானது ரீ.ச. எண். 567/10, பழைய புல உட்பிரிவு 87/12p, பட்டா எண். 583, நல்லிகவுண்டர் மனைவி மாரியாயி என்பவரின் பெயரில் உள்ளது.

இருப்பினும் மேற்காணும் பொது கிணற்றினை 08.04.2026ம் தேதி பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் தூய்மைப்படுத்த செல்லும்போது திரு. கைலாசம், த/பெ கிட்டுசாமி என்பவர் பொது கிணறு அமைந்துள்ள இடமானது ரீ.ச.எண். 87/12 உள்ள பூமியினை நல்லிகவுண்டர் மனைவி மாரியாயி அவர்களின் வாரிசுதாரர்களிடம் இருந்து தனது தந்தை திரு. கிட்டுசாமி என்பவர் சுத்த கிரைய பத்திர பதிவு எண். 818/1987 நாள் 13.07.1987ன்படி கிரையம் பெற்றுள்ளார் எனவும், பின்னர் பாகப்பிரிவினை மூலம் தனக்கு சொந்தமாக உள்ளது என தெரிவித்தும் பதிவினை எதிர்த்து மனுதாரர் திரு. ரமேஷ் கண்ணன் தகப்பனார் திரு. கே. தனக்கோடி என்பவர் பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S.No.143/2022ன்படி ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட பல அதிகாரிகள் மற்றும் தனிப்பட்ட நபர்களின் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். தற்போது வரை வழக்கு நிலுவையில் உள்ளது என தெரிவித்து தனக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட இடத்தில் உள்ள கிணறு சம்பந்தமாக எவ்வித பராமரிப்பு பணியும் மேற்கொள்ள வேண்டாம் என தெரிவித்து ஏற்கனவே 2025ஆம் ஆண்டில் திரு. கைலாசம் கிணற்றை சுற்றியுள்ள வழிதட பாதையினை நடை போக்குவரத்திற்காக சுத்தம் செய்யும் போது மனுதாரர் திரு. ரமேஷ் கண்ணன் தகப்பனார் திரு. கே. தனக்கோடி என்பவர் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் சர்வே எண் 87/12 மற்றும் 87/13 இடம் தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ளதால் இவ்விடத்தினை சுத்தம் செய்ய கூடாது என தெரிவித்து தன் மீது வேண்டுமென்றே புகார் அளித்து பிரச்சனை ஏற்படுத்தினார் என்றும் தற்போது பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் சுத்தம் செய்யக்கூடாது என தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்.

மேலும் திரு.டி. ரமேஷ் கண்ணன், த/பெ. தனக்கோடி 17.06.2025 அன்று தனது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் வரிசை எண்.3ல் கோரப்பட்ட தகவலில் அவரே சர்வே எண். 87ல் உள்ள கிணறானது தனிநபருக்கு சொந்தம் என்றும் உரிமைதாரர் தற்போது இறந்துவிட்ட நிலையில் அவரது சொந்தகாரர்கள் பொது கிணற்றினை மூடிவிட முயற்சிப்பதாகவும் தெரிவித்தும், கிணறானது தனிநபருக்கு சொந்தம் எனில் கிணற்றை மூடுவதற்கு தொடர்பான விவரங்கள் கோரியுள்ளார் என்பதையும் தங்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இவ்வாறு 29 ஆண்டுகளுக்கு முன்னால் பொதுமக்களுக்கு பயன்பாட்டில் இல்லாமல் தனியார் நிலத்தில் அமைந்துள்ள கிணற்றின் வழியே பொது மக்களுக்கு தண்ணீர் வழங்குவது பாதுகாப்பு இல்லாத காரணத்தினாலும், சுகாதார கேடு விளைவிக்கும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும், பாதிக்கப்பட்ட கிணற்றில் இருந்து மாசடைந்து தேங்கியுள்ள தண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட்டது. மேலும் தனியாருக்கு சொந்தமான நிலத்தில் உள்ள கிணற்றில் அரசு நிதி பெற்று தூர்வாரி பொது மக்களுக்கு தண்ணீர் வழங்குவது சாத்தியமில்லாத ஒன்றாகும். அவ்வாறு தூர்வாரி தூய்மைப்படுத்தினாலும் சிறுவர் சிறுமியர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு

நோய் ஏற்படும் அபாயம் உள்ள காரணத்தினாலும் பராமரிப்பு இல்லாத தனியார் கிணற்றில் இருந்து தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது.

தற்போது இப்பேரூராட்சியில் தோரயமாக 11,671 மக்கள் தொகை கொண்ட 4.401 குடியிருப்புகளுக்கும் இப்பேரூராட்சி இரண்டு காவேரி குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி 11 இலட்சம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர 19 ஆழ்துளை கிணறு மின்விசை மூலம் உள்ளூர் தண்ணீரும் மக்களின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. எனவே மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகவே உள்ளது. தனது தனிப்பட்ட நிலப் பிரச்சனைகள் காரணமாகவே கிணறு பராமரிப்பு தொடர்பாக பேரூராட்சிக்கு எவ்வித மனுவும், தகவலும் அளிக்கவில்லை என்பதை தங்களின் மேலான தகவலுக்கு கொண்டு வரப்படுகிறது. எவ்வித முகாந்திரம் இல்லாமல் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறான கண்ணோட்டத்திலேயே மெய்தன்மையில்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை கனிவுடன் பார்வையிட்டு பரிசீலனை செய்து பேரூராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அறிவுரை வழங்கிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. T. ரமேஷ் கண்ணன் மற்றும் எதிர்மனுதாரரான ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 20.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. T. ரமேஷ் கண்ணன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, புல எண். 87/13 மற்றும் 87/12ல் அமைந்துள்ள ஒரு பொதுக்கிணறு கடந்த 60 ஆண்டுகளாக அப்பகுதி மக்களுக்கு இன்றியமையாத நீர் ஆதாரமாக விளங்கி வருகிறது.

- இருப்பினும் இப்பொது கிணற்றில், திடக்கழிவுகளும், பிற மாசுபாடுகளும் குவிந்துள்ளதால் இக்கிணற்று நீரை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத வகையில் மாசடைந்து புறக்கணிக்கப்பட்டுள்ளது.

- இது குறித்து ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் பலமுறை புகார் மனுக்கள் அளித்தும், பேரூராட்சி செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இக்கிணறு தனிநபருக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என தெரிவித்து தனிநபருக்கு சாதகமாக செயல்படுகிறார்.
- நான் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பித்த மேல் முறையீட்டு மனுவிற்கு ஆப்பக்கூடல் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 87/12ல் ஆ. புதுப்பாளையம் பொது கிணறு (பாதைக்கு கிழக்கு) என எனக்கு தகவலாக அளிக்கப்பட்டுள்ளது.

- மேற்காணும் புகார் குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் புகார் அளிக்கப்பட்டது. அப்புகார் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஆப்பக்கூடல் பேரூராட்சிக்கு அனுப்பப்பட்டது. அதன்பேரில் எவ்வித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

- மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானியில் அ.வ.எண். 143/2022 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் எனது தந்தை திரு. தனக்கோடி மனுதாரர் ஆவார். மேலும் அவ்வழக்கு ரீ.ச.எண். 87/13ல் உள்ளபடி நத்தம் புல வரைப்படத்தை சரியான அளவுகளுடன் மாற்றி அமைக்க வேண்டி மட்டுமே அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

- எனவே பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு இணங்க ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி மூலம் கிணற்றை சுகாதாரமான மற்றும் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மீட்டமைக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஈரோடு மாவட்டம் ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 20.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வறட்சி மற்றும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக பேரூராட்சி மூலம் அரசு மற்றும் தனியார் நிலங்களில் கிணறுகள் அமைத்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

- நாளடைவில் பல்வேறு கிணறுகளில் உள்ள குடிநீரானது மாசு ஏற்பட்டதன் காரணமாக பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்ததால் பெரும்பாலான கிணறுகளிலிருந்து குடிநீர் வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டது.

- இதற்கு மாற்று ஏற்பாடாக, பேரூராட்சியில் இயங்கி வரும் சக்தி சர்க்கரை ஆலையின் உதவியுடன் ரூ.181.12 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 21 கி.மீ. நீளத்திற்கு பைப்லைன் மூலம் குடிநீர் தங்கு தடையின்றி பொதுமக்களுக்கு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- வறட்சி காலத்தில் லாரிகள் மூலம் 1 நாள் விட்டு 1 நாள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பொது கிணறு அமைந்துள்ள புல எண். 567/10ல் (பழைய புல எண். 87/12, பட்டா எண். 583) உள்ள இடமானது நல்லிகவுண்டர் என்பவரின் மனைவி மாரியாயி என்பவரின் பெயரில் உள்ளதை 08.04.2026 அன்று இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வருவாய்த் துறை ஆவணம் மூலம் தெரிய வருகிறது.

- இந்நிலையில் மேற்காணும் கிணறு உள்ள இடத்தினை மாரியாயி என்பவரின் வாரிசுதரரர்களிடமிருந்து திரு. கிட்டுசாமி என்பவர் கிரைய பத்திர பதிவுபடி (பதிவு எண். 818/1987 நாள் 13.07.1987) கிரையம் பெற்றுள்ளார். பின்னர் பாகப் பிரிவினை மூலம் திரு. கிட்டுசாமி என்பவரின் மகனான திரு. கைலாசம் என்பவருக்கு சொந்தமாக உள்ளது என கைலாசம் என்பவர் தெரிவித்துள்ளார்.

- மேற்காணும் கிணறு உள்ள இடம் தொடர்பாக மனுதாரரான திரு. T. ரமேஷ் கண்ணன் என்பவரின் தகப்பனார் திரு. கே. தனக்கோடி என்பவர் பவானி, மாவட்ட

உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். OS No. 143/2022) தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

- தனியார் நிலத்தில் அமைந்துள்ள கிணற்றின் வழியே பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்குவது பாதுகாப்பு இன்றியும், சுகாதாரச் சீர்கேடு விளைவிக்கும் என்பதால், தனியார் கிணற்றிலிருந்து தண்ணீர் விநியோகம் செய்ய இயலவில்லை.

- இருப்பினும், இரண்டு காவேரி குடிநீர் திட்டம் மற்றும் 19 ஆழ்துளை கிணறு மின்விசை மூலம் பேரூராட்சியின் அனைத்து குடியிருப்புகளுக்கும் போதுமான வகையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

- மனுதாரரின் தந்தை திரு. தனக்கோடி தனது தனிப்பட்ட நிலப் பிரச்சனையின் காரணமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளதால் கிணறு பராமரிப்பு தொடர்பாக புகார் மனுவை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். எனவே மனுதாரர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் தனது நில பிரச்சனைக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் புகார் மனுவினை சமர்ப்பித்துள்ளார். மேலும் 08.04.2026 அன்று கிணற்றை பேரூராட்சி பணியாளர் மூலம் சுத்தம் செய்யும்போது திரு. கைலாசம் என்பவர் கிணறு மற்றும் அதன் சுற்றியுள்ள இடம் தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு முடியும் வரையில் இக்கிணற்றினை சுத்தம் செய்ய வேண்டாம் என தெரிவித்து பேரூராட்சி அலுவலகத்தில் கடிதம் வழங்கியுள்ளார் என்பதையும் பணிவன்புடன் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம், பவானி இடத்தை சார்ந்த திரு. T. ரமேஷ் கண்ணன் என்பவர் தனது புகார் மனுவிலும் மற்றும் வாக்குமூலத்திலும் ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 87/13 மற்றும் 87/12ல் அமைந்துள்ள கடந்த 60 ஆண்டுகளாக நீர் ஆதாரமாக விளங்கி வரும் பொது கிணறானது மாசடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதை, தூர்வாரி சுத்தம் செய்திட பேரூராட்சியில் புகார் மனு அளிக்கப்பட்டது எனவும் ஆனால் மேற்காணும் கிணறானது பொது கிணறு அல்ல, தனி நபருக்கு சொந்தமான கிணறு என தெரிவித்து பேரூராட்சி செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என புகாராக தெரிவித்திருப்பதும், ஆனால் பேரூராட்சியால் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட தகவலில் இக்கிணறு " பொது கிணறு" என தெரிவிக்கப்பட்டுள்ளது என மனுதாரர் தெரிவித்திருப்பதை அறிய வருகிறது.

மேலும் மனுதாரர் தனது தந்தையார் திரு. தனக்கோடி என்பவரால் புல ரீ.ச. எண். 87/13ல் உள்ளபடி நத்தம் புல வரைபடத்தை சரியான அளவுகளுடன் மாற்றி அமைக்க வேண்டி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானியில் வழக்கு தொடரப்பட்டு (வழக்கு எண். 143/2022) அவ்வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாகவும் தெரிய வருகிறது.

மேற்காணும் மனுதாரரின் புகார் மனு தொடர்பாக, எதிர்மனுதாரரான பவானி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பொது கிணறு அமைந்துள்ள புல எண். 567/10ல் (பழைய புல எண். 87/12 பட்டா எண். 583) உள்ள இடமானது நல்லிகவுண்டர் என்பவரின் மனைவி மாரியாயி என்ற பெயரில் உள்ளதை வருவாய்த் துறையின்

ஆவணம் மூலம் தெரிய வருகிறது எனவும், மேற்காணும் இடமானது மாரியாயி என்பவரின் வாரிசுதாரர்களிடமிருந்து திரு. கிட்டுசாமி என்பவர் கிரையம் பெற்று, பத்திர பதிவு (பதிவு எண். 818/1987 நாள் 13.07.1987) செய்துள்ளார் எனவும், பின்னர் பாகப்பிரிவினை மூலம் கிட்டுசாமி என்பவரின் மகனான திரு. கைலாசம் என்பவருக்கு சொந்தமாக உள்ளது என தெரிவித்திருப்பதை அறிய முடிகிறது.

இதற்கிடையில் கிணறு உள்ள இடம் தொடர்பாக திரு. T. ரமேஷ் கண்ணன் என்பவரின் தந்தையார் திரு. கே. தனக்கோடி என்பவர் பவானி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். O.S.No. 143/2022) தொடந்து, அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதையும், மேலும் 08.04.2026 அன்று கிணற்றை பேரூராட்சி பணியாளர் மூலம் சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டபோது திரு. கைலாசம் என்பவர் கிணறு மற்றும் சுத்தியுள்ள இடம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு முடியும் வரையில் கிணற்றினை சுத்தம் செய்திட வேண்டாம் என தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார் என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டிருப்பது கருத்தில் கொள்ளப்பட்டது.

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to,-

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் புகாராக தெரிவித்திருக்கும் பேரூராட்சியால் சுத்தம் செய்யப்படாமல் இருக்கும் கிணறு அமைந்துள்ள இடம் தொடர்பாக திரு. தனக்கோடி என்பவரால் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானி-ல் வழக்கு (O.S. No. 143/2022) தொடரப்பட்டு அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக மனுதாரர் திரு. T. ரமேஷ் கண்ணன் மற்றும் எதிர்மனுதாரரான ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3)(b)ன்படி மனுதாரரின் 10.02.2026 நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்ற விசாரிக்கலாகாது என்பதால் இப்புகார் மனு தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. T. ரமேஷ் கண்ணன்,
எண். 65, ஓம் காளியம்மன் கோவில் தெரு,
A. புதுப்பாளையம், சக்தி நகர் அஞ்சல், பவானி,
ஈரோடு மாவட்டம் - 638 315.

2. செயல் அலுவலர்,
ஆப்பக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/7/26
செயலாளர்
02/7/26